RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1624

# உடுமலை வட்டார சிறுமியர்களின் விளையாட்டுப் பாடல்கள்

**சி.ரா. சக்திவேல்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, செட்டியார்பாளையம், முத்தூர்-638105, தமிழ்நாடு, இந்தியா

# Play Songs of the Udumalai Girls

**C. R. Sakthivel** [a, *]

[a] Department of Tamil, Karuppannan Mariappan College, Chettiyar Palayam, Muthur-638105, Tamil Nadu, India

* Corresponding Author: dragasthiar@gmail.com

Received: 30-06-2022
Revised: 28-09-2022
Accepted: 16-10-2022
Published: 12-12-2022

**ABSTRACT**

In village children play games by singing small songs. These songs are called playing songs. Childhood is the playing period. Children hate to stay still in one place. Childhood is the period where children express their thoughts and actions to others and make others happy. They play, dance and enjoy in this period. Children are very happy when they play with their friends. They sing songs and make fun. Nature gifts children with songs. These songs are short and sweet and it has beautiful meanings. But some songs are meaningless. Some songs are chained with many riddles. The article is about the playing songs sung by Udumalai children.

**Keywords:** Udumalai, Play Songs, Games, Childhood, Friendship.

## முன்னுரை

நாட்டுப்புறப்பாடல்களுள் விளையாட்டுப் பாடல்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. சிறுவர் சிறுமியர்கள் விளையாடும்போது பாடப்படும் பாடல்கள் விளையாட்டுப் பாடல்கள் எனப்படுகின்றன. இதில் பாடலும் விளையாடலும் ஒன்றிணைந்து இருக்கும். சிறுவர்களின் மனமகிழ்ச்சியையும் அவர்களின் உற்சாகத்தையும் இவ்வகைப் பாடல்கள் மீட்டெடுக்கின்றன. சந்த நடை, எளிய சொற்கள், திருப்பிச் சொல்லும் மொழிநடை, ஓசை நயம், இனிமை ஆகியவை இப்பாடல்களின் தனிச்சிறப்பாகும்.

பொதுவாக நாட்டுப்புற விளையாட்டுகள் ஆண்களுக்கானவை, பெண்களுக்கானவை, குழந்தைகளுக்கானவை, சிறுவர் சிறுமியருக்கானவை என்று பிரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்காக எழுதப்பெறும் பாடல்கள், குழந்தைகள் தமக்குத் தாமே எழுதிக்கொள்ளும் பாடல்கள் ஆகிய இரு நிலைகளில் சிறுவர் பாடல்கள் அடிப்படையில் அமைகின்றன.

மூன்று வயது முதல் பதினாறு வயது வரையிலான குழந்தைகளுக்காகப் படைக்கப்பெறுவது சிறுவர் இலக்கியம். அதாவது பள்ளிக்கல்வி முடியும் வரையிலான பருவத்தினருக்குரியது எனலாம். சிறுவர் இலக்கியம் என்பது குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களது மனநிலைக்கும் வயதுக்கும் பொருந்தும் வகையில் சொற்களில் எளிமை, வாக்கியங்களில் இனிமை, பொருள் விளக்கத்தில் குழப்பம் ஏற்படுத்தாத தெளிவு இருக்கும். குழந்தைப் பாடல்களின் பாடற்பொருள் தெரிந்த பொருளாக இருக்கும். எளிய நடையில் மன நிலைக்கும், வயதிற்கேற்பவும் அமையும். சந்த நயத்தோடு குழந்தைகள் தாமே பாடி மகிழ்வனவாக இருக்கும். இக்கட்டுரையில் உடுமலை வட்டார சிறுமியர்கள் பாடும் பூப்பறிக்க வருகிறோம், தட்டாங்கல், பன்னாங்குழி, நிலாச்சோறு, கண்ணாம்பூச்சி, கிள்ளி

விளையாடுதல், தொட்டு விளையாடுதல், சுற்றி விளையாடுதல், முயல் விளையாட்டு, பூக்கேட்டல் போன்றவை வழக்கிலுள்ளன. இவற்றைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## விளையாட்டுப் பாடல் விளக்கம்

விளையாட்டு பாடல்களைச் சிறுவர்களும் சிறுமிகளும் பாடுவதால் சிறுவர் பாடல்கள் என்றும் அழைக்கலாம். சிறுவர் பாடல்களுக்கான விளக்கம் இதுவெனக் கூறிவிடுதல் எளிதன்று, காரணம் சிறுவர் பாடல்களைப் பெரியோர்களும் பாடுகின்றனர், இளைஞர்களும் பாடுகின்றனர். மேலும் இதுகுறித்துத்தான் சிறுவர்கள் பாடல்கள் அமையுமென்று கூறமுடியாது.

## விளையாட்டுப் பாடல்களின் தனித்தன்மைகள்

சிறுவர் பாடல்களின் தனித் தன்மைகள் குறித்து பல அறிஞர்கள் பலவாறான கருத்துக்களைகத் தெரிவிக்கின்றனர். அவை வருமாறு "பள்ளிக்கூடங்களே இல்லாத நாட்டுப்புறங்களில் குழந்தைகள் ஓடியாடிய இடங்களே 'கிண்டர்கார்டன் பள்ளிகள்' அவர்கள் விளையாடிய விளையாட்டுக்களே 'ரைம்' சொல்லிக் கொடுக்கும் ஆசிரியைகள்" என்றும் குறிப்பிடுவார் (Annamalai, 1984).

"இவற்றில் பொருளைவிட சந்தப் பயிற்சியும் சொற்பயிற்சியுமே முக்கியமாகக் காணப்படுகின்றன" என்பார் (Vanamaamaalai, 1964). "உலகம் உள்ளவரை உயிர்கள் இருக்கும், மாந்தன் இருப்பான், மாந்தன் இருக்கும்வரை மழலைகள் இருக்கும். மலைகள் இருக்கும் வரை மழலைப் பாடல்களும் இருக்கும்" என்பார் (Sanmugasundram, 1993).

சிறுமியர் பாடல்கள் சிறுமியர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதோடு மட்டுமல்லாமல் அறிவு வளர்ச்சியினையும் மொழி அறிவையும் ஊட்டுவனவாக உள்ளன. மேலும் அவர்களுக்கு நினைவாற்றல் திறனை வளர்க்க இப்பாடல்கள் பெருந்துணை புரிகின்றன என்பதை "விளையாட்டுப்பாடல்கள் குழந்தைகளின் மனம், பருவம், விருப்பம் இவற்றிற்கு ஏற்ப அமைந்திருப்பதாக மட்டுமின்றி குழந்தைகளின் மன வளர்ச்சியையும் உடல் வளர்ச்சியையும் கவனத்தில் கொண்டுள்ளன" எனும் கருத்து சிறுமியர் பாடல்களின் தனித்தன்மைகளைக் கோடிட்டுக் காட்டுவனவாகும். இதிலிருந்து சிறுமியர் பாடல்கள் ஒலிநயத்துடன் அமையும் நாட்டுப்புறப்பாடல்கள் எனலாம் (Nadarajan, 1979).

## சிறுமியர் விளையாட்டுகள்

சிறுமியர் விளையாட்டுகள் பெரும்பாலும் அக விளையாட்டுகளாகவே உள்ளன. களப்பகுதியில் சிறுமியர் பாடல் பாடி விளையாடும் விளையாட்டுக்கள் 1.பூப்பறிக்க வருகிறோம் 2.தட்டாங்கல் 3.பன்னாங்குழி 4.நிலாச்சோறு ஆகியன காணப்படுகின்றன. இதில் தட்டாங்கல், பன்னாங்கல் இரண்டும் உட்கார்ந்து விளையாடும் விளையாட்டாகும். பூப்பறிக்க வருகிறோம் சிறுமியர் குழுவாக விளையாடும் ஒரு விளையாட்டு ஆகும். நிலாச்சோறு விளையாட்டு திருவிழா நாளில் சிறுமியர் பாடி ஆடி விளையாடும் விளையாட்டாகும்.

## பூப்பறிக்க வருகிறோம்

இவ்விளையாட்டினை சிறுவர் சிறுமியர் இருவருமே குழுவாகச் சேர்ந்து விளையாடினாலும் பெரிதும் சிறுமியர்களை விரும்பி விளையாடும் மென்மையான விளையாட்டாகும். நடுவில் ஒரு கோடு போட்டு இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நின்று கொள்வர். ஒரு குழுவினர் பூப்பறிக்க வருகிறோம் என்று பாடுவர். இரண்டாம் குழுவினர் எந்தப் பூவைப் பறிக்கிறீர் என்று கேட்பார். முதற்குழுவினர் ஒரு பெயர் சொல்வார். இதன்பின் அப்பெயரை உடையவரை தமது குழுவினருக்குள் இழுப்பர். இவ்வாறு தொடர்ந்து இந்த விளையாட்டு நடைபெறும். இவ்விளையாட்டின் போது பாடப்படும் பாடல் வருமாறு.

"பூப்பறிக்க வருகிறோம் பூப்பறிக்க வருகிறோம்

எந்த மாதம் வருகிறீர் எந்த மாதம் வருகிறீர்

ஆனி மாதம் வருகிறோம் ஆனி மாதம் வருகிறோம்

ரோஜாப் பூவைப் பறிக்கிறோம் ரோஜாப் பூவைப் பறிக்கிறோம்"

இப்பாடல் சிறுமியர்கள் குழுவாக விளையாடும் விளையாட்டிற்கேற்ப அமைந்துள்ளதைக் காணலாம் (Sanmugasundram, 1975). ஒரு குழுவினர் முதல் அடியைப் பாட அதற்கு விலையாக அடுத்த குழுவினர் இரண்டாம் அடியைப் பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் இடம் பெறும் மலர்களின் பெயர்களும், மாதங்களின் பெயர்களும் சிறுமியர்கள் அறிந்த பெயர்களாக அமைவதுடன் பாடல் எளிய பதத்துடன் அமைய காரணமாக அமைகின்றது. "பூப்பறிக்க வருகிறோம் என் முதல் அடி திரும்பத் திரும்ப வந்து பாடலை இசையுடன் பாட வழி செய்கின்றது. இவ்வகையில் இவ்விளையாட்டு சிறுமியர்கள் விரும்பி விளையாடும் மென்மையான விளையாட்டாக அமைந்து காணப்படுகின்றது.

## தட்டாங்கல்

கற்களை மேலே தூக்கிப்போட்டு அவை கீழே விழுவதற்குள் தரைதட்டி பிடிக்கும் முறை ஆதலால் தட்டாங்கல் என அழைத்திருப்பர். இவ்வாறு மேலே ஒரு கல்லை தூக்கிப் போட்டு கீழே உள்ள கற்களை 1,2,3,4 என்றவாறு சோடி சோடியாக எடுக்கும்போது பாடல்கள் பாடுகின்றனர். இப்பாடல் வரிகளில் சில வருமாறு:

"ஒன்னாங்கல்லு ஊசிமலை ஊசி

ரெண்டாங்கல்லு இரட்டினப் பதக்கம்" (Achammal, 2021, Age 66, Personal Interview, Tiruppur, India)

என்றவாறும்

"ஓரி ஒலகலா

ஒல கலஞ் சூரிய

சூரிய தங்கச்சி

சுந்தரம்மா வெள்ளச்சி

காட் காட் ஈஸ்வரி

கம்மங்காட் ஈஸ்வரி

பொன்னாத்தா மேலே

பொதி பணம் ஒன்று"

என்னும் பாடல்கள் பாடிக் கொண்டே கற்களை எடுப்பர். இவ்விளையாட்டில் இரண்டு பேர் கட்டாயம் இடம்பெறுவர். கற்களை எடுக்கும்போது வேறு கற்களில் விரல்கள் படக்கூடாது என்பது விதி. இதனால் மனக் கட்டுப்பாடும் அவசரமின்மையும் சிறுமியர்களிடம் வளர்கின்றன எனலாம் (Kannammal, 2021, Age 66, Personal Interview, Tiruppur, India).

## பன்னாங்குழி

பெண்களும் சிறுமியர்களும் மிக விரும்பி விளையாடும் விளையாட்டு பன்னாங்குழி விளையாட்டு ஆகும். குழிகளின் எண்ணிக்கை பதிநான்கு ஆகும். இவ்விளையாட்டை இரவில் விளையாடமாட்டார்கள். காரணம், குழியில் கை வைத்து துடைப்பது போலவே வீட்டிலும் செல்வம் துடைத்துக் கொண்டு போய்விடும் என்பதால் ஆடமாட்டார்கள். பதிநான்கு குழியிலும் சிறிய கற்கள் அல்லது புளியங்கொட்டைகளை நிரப்பி விளையாடுவர். இவ்விளையாட்டின் போது பாட்டு பாடுவது உண்டு.

"பல்லாங்குழி பல்லாங்குழி

பதிநான்னு பழம்விழும் குழி" (Lashmiammal, 2021, Age 63, Personal Interview, Tiruppur, India)

இவ்விளையாட்டில் அதிகமாகன கற்களைப் பெறுபவர்களே வெற்றி பெற்றவராவார். இதனை பெரும்பாலும் வீட்டின் உள்ளேயே விளையாடுகின்றனர். மரக்கட்டையில் பன்னாங்குழி செய்து வீடுகளில் வைத்து இருப்பதைக் காணமுடிகிறது. இவ்விளையாட்டில் இரண்டு பேர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். குழியில் கல்லை நிரப்பும் கணக்கின் அடிப்படையில் எதிரியை தோற்கடிக்க முடியும் என்பதே இவ்விளையாட்டின் வெற்றி பெறும் அமைப்பாகும்.

## நிலாச்சோறு

இவ்விளையாட்டு உடுமலைப்பேட்டை, பழனி, பொள்ளாச்சி வட்டாரங்களிலும் காணப்படுவதாகும். தைப்பூச நாளில் பழனி தேர்த்திருவிழா நோம்பன்று சாணிப் பிள்ளையாரை ஆற்றில் விடும் சமயச் சடங்குடன் சேர்ந்த விளையாட்டாகவும் இவ்விளையாட்டு அமைகிறது. இதனை நிலாச் சோறு சாப்பிடுதல் என்றும் அழைக்கின்றனர். சிறுமியர் ஒருவர் உணவை மற்றொருவருக்கு கொடுத்து மகிழ்ந்து பாடுகின்றனர். இவ்விளையாட்டு எந்தக் காலத்திலும் பாடி ஆடும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது. சிறுமியர் நிலாவை வாழ்த்தி கைதட்டி பாடி ஆடுவதையே நிலாச்சோறு விளையாட்டு என்கின்றர். இவ்விளையாட்டின்Nhது சிறுமியர்கள் பாடும் பாடல் வருமாறு:

"நிலா நிலா நாச்சி

என்னென்ன தந்தே

சித்தாட தந்தே

சிறுசலங்க தந்தே" (Kannammal, 2021, Age 66, Personal Interview, Tiruppur, India)

என்றும்

"வட்ட வட்ட புள்ளையாரே

வாபுக்கலப் புள்ளையாரே

உண்டுண்டு புள்ளையாரே"

என்றும் நிலாவையும் பிள்ளையாரையும் இணைத்து பாட்டு பாடி ஆடி மகிழ்வது கொங்கு நாட்டில் இன்றும் காணமுடிகிறது. இவ்வாறு சிறுமியர்கள் மட்டும் விளையாடும் விளையாட்டுக்கள் களப்பகுதியில் பல வழக்கில் இருக்கின்றன (Kandasamy, 2021, Age 48, Personal Interview, Tiruppur, India).

## சிறுவர் சிறுமியர் விளையாட்டு

சிறுவர் சிறுமியர் இருபாலரும் சேர்ந்து பாட்டுப்பாடி விளையாடும் விளையாட்டாக கண்ணாம்பூச்சி, கிள்ளி விளையாடுதல், தொட்டு விளையாடுதல், சுற்றி விளையாடுதல், முயல் விளையாட்டு, பூக்கேட்டல் போன்றன களப்பகுதியில் வழக்கிலுள்ளன. இவற்றை பின்வருமாறு காணலாம்.

## கண்ணாமூச்சி

கிராமங்களில் சிறுவர் சிறுமியர் குழுவாக சேர்ந்து கண்ணாமூச்சி எனும் கண்டுப் பிடித்து விளையாடும் விளையாட்டை விளையாடுவர். ஒரு சிறுவனின் கண்களை மற்றொரு சிறுவன் தனது இரண்டு கைகளாலும் பொத்திக்(மூடிக்) கொள்ள மற்ற சிறுவர்கள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். இதன் பின்னர் கண்ணைப் பொத்திக் கொண்டு இருப்பவன் பின்வருமாறு ஒரு பாடலைப் பாடுவான்.

“கண்ணா மூச்சி ரே ரே

காட்டுத் தலச்சி ரே ரே

ஊளை மெட்டத் தின்னுட்டு

நல்ல மொட்டக் கொண்டுட்டு

வாய்க்காலுக்கு போய்

வாயை கழுவிட்டு வா” (Lashmiammal, 2021, Age 63, Personal Interview, Tiruppur, India)

இப்பாடலின்படி ஒளிந்து கொண்டிருப்பவர்களில் யாரையேனும் கண்டுபிடித்து வா என்று கண்களை பொத்திக் கொண்டு இருப்பவன் சொல்லி கைகளை கண்களில் இருந்து எடுத்து விடுவான். கண்டுப்பிடித்து வரவேண்டியவன் கண்களில் முதன்முதலில் யார் தென்படுகிறார்களோ அவர்கள் தோல்வி அடைந்தவர்கள் ஆவர். இதன் பின்னர் தோல்வியடைந்தவரின் கண்களைப் பொத்தி யாரேனும் கண்டு பிடித்து வரும்படி சொல்வர். இப்படியே இவ்விளையாட்டு இவர்கள் களைத்துப் போகும் வரை தொடரும். இவ்விளையாட்டில் ஓடி ஒளியும் சிறுவர்கள் எங்கேனும் மறைவிடத்தில் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தும் படுத்தும் தங்களைப் பிறர் காணாதவாறு மறைந்து இருப்பர். இவ்வாறு மறைந்திருக்கையில் கண்டுப்பிடிப்பவனுக்கு எளிதில் காணும்படி ஒலி எழுப்பவோ வேறு சாடைக் காட்டவோ மாட்டார்கள். தேடி வருபவன் தானே கண்டுபிடித்தால் மட்டுமே அது ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறாக இவ்விளையாட்டுச் சிறுவர் சிறுமியர்களிடம் ஒற்றுமையுணர்வையும் குழு மனநிலையையும் வளர்ப்பதில் பெரும் பங்காற்றுகின்றது. மேலும் ஓடி ஒளிதல் இடம்மாறி ஒளிதல் என்பவற்றால் உடல் அசைவுகள் நல்ல உடற்பயிற்சியாகவும் அமைகின்றன எனலாம்.

## கிள்ளி விளையாடுதல்

சிறுவர்,சிறுமியர் ஏதேனும் ஒரு பாட்டு பாடி அதன் இறுதி அடியில் குத்து என்றும் கொட்டு என்றும் உதை என்றும் கிள்ளு என்றும் பாடி முடித்து அதன் படி கையால் கிள்ளி அல்லது உதைத்து அல்லது குத்தி விளையாடுவர். இவ்விளையாட்டைக் கிள்ளி விளையாடுதல் என்று அழைக்கின்றனர். இவ்விளையாட்டின் போது பாடப்படும் பாடல் வருமாறு

"அக்கா வீட்டுக்கு போனேன்

அரிசி பருப்பு தந்தாங்க

வேண்டான்னு சொன்னே

வெளியே வந்தே

வெள்ளியம்மா வெள்ளி

வெத்தல பாக்கைக் கிள்ளி”

இவ்வாறு பாட்டு முடிந்ததும் பொய்யாகக் கிள்ளி வைத்து விளையாடுகின்றனர் (Karuppaiyi, 2021, Age 56, Personal Interview, Tiruppur, India).

## சுற்றி விளையாடுதல்

சிறுவர் சிறுமியர் குழுவாகச் சேர்ந்தும், பின்னர் ஒவ்வொருவரும் தம் கைகளை நீட்டிக் கொண்டும் தன்னைத் தானே சுற்றி ஆடுவார். அவ்வாறு ஆடும்பொழுது

“கரகர வண்டி

காமாட்சி வண்டி

கிழக்கே போவுது

பொள்ளாச்சி வண்டி

கர கர வண்டி

கரகர வண்டி"

என்றவாறு இறுதியடியாகிய கரகர என்பதைச் சொல்லிக் கொண்டே சுற்றி இறுதியில் தரையில் விழுந்து உலகமே சுற்றுவது போல் சுற்ற மயங்குவது போன்று நடித்து மகிழ்வர். இதனை சுற்றி விளையாடுதல் என்பர். இதேபோன்று

"குத்தடி குத்தடி சைலக்கா

குனிஞ்சு குத்தடி சைலக்கா"

என்ற பாடலை பாடிக்கொண்டே ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் பிடித்து சுற்றி ஆடுவதையும் காண முடிகின்றது.

## முயல் விளையாட்டு

சிறுமியர் சிறுமியர்கள் கைகளைத் தலைக்கு மேல் முயலின் காதுகளைப் போல் வைத்துக் கொண்டு முயலைப் போன்று குதித்து விளையாடுகின்றனர். இது முயல் விளையாட்டு எனப் பெயர் பெறுகிறது. இவ்விளையாட்டின் போது பின்வரும் பாடல் பாடுகின்றனர்.

"மொட்டடடா மொட்டு

மொட்டுக்குச் சம்பளக்கட்டு

தவளத் தவள நாங்க

தவளத் தவள நாங்க

தவளப் பெண்டுங்க நாங்க

கப்பலேறிக் கூத்து பார்க்கிற

கவுண்ட மாருங்க நாங்க"

என்று பாடி மகிழ்கின்றனர் (Chellammal, 2021, Age 56, Personal Interview, Tiruppur, India).

## முடிவுரை

உடுமலை வட்டாரத்தில் உள்ள கிராமங்களில் சிறுவர் சிறுமியர் விளையாடும் பொழுது விளையாட்டிற்கேற்ப பல பாடல்களைப் பாடி விளையாடுகின்றனர். இப்பாடல்கள் விளையாட்டுப் பாடல்கள் என்று பெயர் பெறுகின்றன. விளையாட்டுக்களைச் சிறுவர் விளையாட்டு, சிறுமியர் விளையாட்டு, சிறுவர் சிறுமியர் விளையாட்டு என மூன்று வகைப்படுத்தலாம். சிறுமியர் விளையாட்டுக்கள் பெரும்பாலும் அக விளையாட்டாகவே உள்ளன இதில் பல விளையாட்டுக்களில் குழுவாகச் சேர்ந்து விளையாடும் தன்மை அமைந்துள்ளன. இவ்விளையாட்டுக்களில் மென்மையான ஆடல் அமைப்புக்களே பெரிதும் இடம் பெற்றுள்ளன. சிறுவர் சிறுமியர் சேர்ந்து விளையாடும் கண்ணாம்பூச்சி, தொட்டு விளையாடுதல், கிள்ளி விளையாடுதல், சுற்றி விளையாடுதல் போன்றவற்றில் உடற்பயிற்சியும், குழு மனநிலையும் பெரிதும் அமைந்து காணப்படுகின்றன.

## References

Annamalai, M. (1984) Namathu Pantil Nattupura ilakkiyam, Maruthamalaiyan Pathippagam, Chennai, India.

Nadarajan, T.S. (1979), Nattupura Siruvar padakal, New Century Book House, Chennai, India.

Sanmugasundram, S. (1975) Nattupuraviyal aaivu, Manivasagar Pathippagam, Chennai, India.

Sanmugasundram, S. (1993) Tamil Nattupura Padalkal, Manivasagar Pathippagam, Chennai, India.

Vanamaamaalai, N. (1964) Tamilar Nattup padalkal, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License